| UG–122 | BTM–21 |
|---|---|

# B.A. DEGREE EXAMINATION – DECEMBER, 2018

## Second Year

## இடைக்கால இலக்கியம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

பத்து வினாக்களுக்கு ஒரு தொடரில் விடையளிக்க.

1. தேவாரப் பதிகங்களைத் தொகுத்தவர் யார்?

2. சிவபெருமானைப் 'பித்தா' எனத் தொடங்கிப் பாடியவர் யார்?

3. பெரியாழ்வார் பாடிய நூல்களுள் இரண்டு மட்டும் கூறுக.

4. 'நிராமயம்' – பொருள் தருக.

5. சிலப்பதிகாரம் எச்சமயம் சார்ந்தது?

6. பெண்மைக் கோலத்தோடு காமன் ஆடிய கூத்து எது?

7. 'பொய்யுரையாத புண்ணியன்' என்று தாரை யாரைக் கூறுகிறாள்?

8. கம்பர் தன் நூலுக்கு இட்ட பெயர் யாது?

9. கோலியாத்தை வெல்பவனுக்குச் சவுல் மன்னன் என்ன பரிசு அறிவித்தான்?

10. தாவீது போருக்குப் பயன்படுத்திய கருவி எது?

11. ‘தோடுடைய செவியன்’ யார்?

12. சேக்கிழாரின் இயற்பெயர் யாது?

13. ‘மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள் ’ — யார்?

14. ‘சனகன் பெற்ற அன்னம்’ — யார்?

15. ‘ஆதிமனிதன்’ — யார்?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

ஐந்து வினாக்களுக்கு ஒருபத்தி அளவில் விடை தருக.

16. ‘பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக’ – யார், யாரிடத்தில் கூறியது?

17. கண்ணனுக்குப் பிற கடவுளர் எவற்றையெல்லாம் அளித்ததாகப் பெரியாழ்வார் கூறுகிறார்?

18. மாதவி கோவலனுக்கு எவற்றை அளித்தாள்?

19. வாலி, இராமனிடம் வேண்டிய வரங்கள் யாவை?

20. வீரமாமுனிவர் படைத்த இலக்கண நூல்களைக் கூறுக.

21. 'பிரமபுரம்' – பெயர்க்காரணம் கூறுக.

22. மாணிக்கவாசகருக்காக இறைவன் நிகழ்த்திய அற்புதங்கள் எவை?

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

ஐந்து வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடையளிக்க.

23. சுந்தரர் இறைவனை எங்ஙனம் போற்றுகிறார்?

24. திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களின் பொருண்மையைக் கூறுக.

25. கோவலனைப் பிரிந்த கண்ணகியின் கோலத்தை வருணிக்க.

26. அனுமன் குறித்து, வாலி இராமனிடம் கூறியன யாவை?

27. கோலியாத்தின் தோற்றத்தை வருணிக்க.

28. ஊருக்குரிய இலக்கணமாக அப்பர் கூறுவன யாவை?

29. குணங்குடியாரின் பொதுமை நோக்கைப் புலப்படுத்துக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

மூன்றனுக்கு மூன்று பக்க அளவில் விடையளிக்க.

30. சிவபெருமான் குறித்த புராணச் செய்திகளை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

31. மெய்ப்பொருள் நாயனாரின் சிவநெறிச் சிறப்பினை இயம்புக.

32. சிலப்பதிகாரம் காட்டும் அக்கால மணமுறையை எடுத்துரைக்க.

33. வாலியின் பேராற்றல்களை எடுத்துரைக்க.

34. 'தாவீது-கோலியாத்' இடையே நடைபெற்ற போர்க் காட்சியை விளக்கியுரைக்க.

———————

| UG–123 | BTM–22 |
|---|---|

# B.A. DEGREE EXAMINATION – DECEMBER, 2018.

## Second Year

## Tamil

இலக்கணம் 2 (நம்பியகப் பொருள் புறப்பொருள் வெண்பாமாலை)

Time : 3 hours  Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஒரு தொடரில் விடை தருக.

1. ஓதற் பிரிவிற்குரிய காலவரையறை எத்தனை ஆண்டுகள்?

2. கைக்கிளையின் பாகுபாடு யாவை?

3. பாங்கிமதி உடம்பாட்டின் வகைகள் யாவை?

4. பலர் அறிய நிகழும் பழிமொழி ————————

5. பகற்குறி இடையீட்டின் வகைகள் யாவை?

6. தலைவியைக் காணவராமல் தலைவன் சில நாட்கள் ஊரில் இருப்பது ————————

7. களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித் தொகைகள் யாவை?

8. நற்றாய் தலைவியின் பிரிவால் கவலையுற்று வீட்டின்கண் இருந்தது புலம்புவது ————————.

9. அகப்பாட்டு உறுப்புகள் எத்தனை?

10. 'உட்காது எதிரூன்றல்' ———————— திணை ஆகும்.

11. ஒற்றர்களுக்குச் சிறப்புறக் கொடுத்தலைக் கூறுவது எப்பெயரால் சுட்டப்படும்?

12. காஞ்சி வேந்தன் வஞ்சியரசனின் படையைப் புறமுதுகிட்டு ஓடச் செய்வது' – எவ்வாறு கூறப்படும்?

13. மன்னனை உழவனாக உருவகப்படுத்திப் பாராட்டியது ————————

14. ஆண் மகனின் ஒழுகலாறுகளைப் புகழ்ந்து பாடுவது எத்திணை?

15. 'கள வேள்வி' என்பது யாது?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.

16. களவுப் புணர்ச்சியின் வகைகள் யாவை?

17. 'பிரிவுழி மகிழ்ச்சி ' என்றால் என்ன?

18. இரவுக்குறி இடையீட்டின் வகைகள் யாவை?

19. 'ஒருவழித் தணத்தல்' என்றால் என்ன?

20. இறைச்சிப் பொருள் குறித்து எழுதுக.

21. திணை மயக்கம் என்றால் என்ன?

22. தழிஞ்சி என்றால் என்ன?

பகுதி இ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. குறியிடம் குறித்து எழுதுக.

24. கற்பில் நிகழும் பிரிவுகள் யாவை?

25. வரைவு கடாதல் குறித்து எழுதுக.

26. கற்பிற்குரிய கிளவித் தொகைகள் யாவை?

27. ஆளெறி பிள்ளை, பிள்ளைத் தெளிவு குறித்து எழுதுக.

28. அரச வாகை, முரச வாகை –வரையறை தருக.

29. கல்நடுதல், கல்முறை பழிச்சல் குறித்து எழுதுக.

பகுதி ஈ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. பிரிவின் வகைகள் குறித்து எடுத்துரைக்க.

31. ஒருவழித் தணத்தல் குறித்த செய்தியினை தொகுத்துரைக்க.

32. திணை மயக்கம் குறித்து எழுதுக.

33. ‘ஆநிரை மீட்டல்’ குறித்த கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

34. ஆண்மகனின் ஒழுகலாறுகளைப் பாடாண்திணை எங்ஙனம் எடுத்தியம்புகிறது?

| UG–124 | BTMAL–21 |
|---|---|

# B.A. DEGREE EXAMINATION — DECEMBER, 2018.

Second Year

Tamil

இதழியல்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒரு தொடரில் விடை தருக.

1. 1856-இல் பெர்சிவால் பாதிரியார் சென்னையில் தொடங்கி நடத்திய முதல் வார இதழ் எது?

2. இந்திய இதழ்கள் சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?

3. 'செர்வன்ட் ஆப் இந்தியா' இதழ் ஆசிரியர் யார்?

4. 'இந்தியா கெஜட்' என்னும் இதழ் ஆசிரியர் யார்?

5. தமிழில் நகைச்சுவைக்கு முதலிடம் கொடுத்து வந்த இதழ் எது?

6. காந்தியடிகள் உருவாக்கிய பத்திரிகையின் பெயர் என்ன?

7. சட்ட விளம்பரம் ஏதேனும் இரண்டினைக் கூறுக.

8. எந்த ஆண்டில் இதழ்களுக்கான சட்டத்தை அமெரிக்கச்சங்கம் வெளியிட்டது?

9. செய்தி ஆசிரியர்களுக்கு உதவக்கூடிய நூலகத்தின் ஆங்கிலப்பெயர் என்ன?

10. 'நியூஸ்' (News) என்ற ஆங்கிலச் சொல்லின் விரிவாக்கம் என்ன?

11. செய்தி மூலங்களுள் எவையேனும் இரண்டினைக் கூறுக.

12. இந்தியச் செய்தி நிறுவனத்தை முதன்முதலில் அமைத்த பெருமைக்குரியவர் யார்?

13. சோவியத் ரஷ்யாவின் செய்தி நிறுவனமான டாஸ் நிறுவனத்தின் மற்றொரு பெயர் என்ன?

14. நூல் மதிப்புரைப் பகுதியை வழங்கும் நாளிதழ் இரண்டினைக் கூறுக.

15. பெரியார் நடத்திய இதழின் பெயர் என்ன?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடை தருக.

16. இதழியல் - விளக்கம் தருக.

17. 'ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி' குறிப்பு வரைக.

18. விடுதலை இயக்கக் காலத்தில் வெளிவந்த தமிழ் இதழ்கள் நான்கினைக் கூறுக.

19. அஞ்சல், தந்திச் சட்டங்கள் குறித்தெழுதுக.

20. 'பிடிஐ' நிறுவனத்தின் செய்திப் பணி மூன்றினைக் கூறுக.

21. சமாச்சார் பாரதி நிறுவனம் குறித்தெழுதுக.

22. P.M, SCOOP, TIP, POREMAN ஆகியவற்றிற்குரிய இதழியல் கலைச்சொற்கள் யாவை?

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. இதழியல் விளக்கம், இலக்கணம் குறித்தெழுதுக.

24. மக்கள் தொடர்பு முறை பகுப்புப் பற்றி எழுதுக.

25. பத்திரிகைச் சட்டங்கள் முதல் மூன்றினை விளக்குக.

26. செய்தியாளரின் விளக்கம் கூறி வகைகளை எடுத்துரைக்க.

27. இதழ்களில் குற்றச் செய்திகள் குறித்தெழுதுக.

28. நூல் திறனாய்வு குறித்த செய்திகளை விளக்குக.

29. செய்திகளைச் செப்பனிடுதலில் கவனிக்க வேண்டியவை யாவை?

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. தமிழகத்தில் இதழியல் வளர்ச்சி குறித்துக் கட்டுரைக்க.

31. செய்தி விளக்கம், செய்தியாவன, செய்தியின் இயல்புகள் குறித்துத் தொகுத்துரைக்க.

32. இதழ்களில் இடம்பெறும் பல்வேறு செய்திகள் குறித்த கருத்துக்களை விளக்கி எழுதுக.

33. இதழியலில் தலைப்பு (Head line) அமையும் முறை குறித்தெழுதுக.

34. பத்திரிகையில் தலையங்கம் பெறும் இடத்தினை மதிப்பிடுக.

---

| **UG–125** | **CCE** |
|---|---|

U.G. DEGREE EXAMINATION –
DECEMBER, 2018.

Second Year

ENVIRONMENTAL STUDIES

Time : 3 hours Maximum marks : 75

PART A — (3 × 5 = 15 marks)

Answer any THREE questions.

Each answer should not exceed 2 pages.

1. Discuss the nature and scope of environmental studies.

சுற்றுச்சூழல் ஆய்வுகளின் இயல்பையும் நோக்கத்தையும் பற்றி விவாதிக்கவும்.

2. Give a short note on energy resources.

ஆற்றல் வளங்கள் – விளக்கவும்.

3. Write a brief account of ecosystem.

சுற்றுச் சூழலியல் அமைப்பு – விளக்கவும்.

4. What are the causes for water pollution?

நீர் மாசுக்கான காரணங்கள் யாவை?

5. Explain any five strategies of disaster management.

பேரிடர் மேலாண்மையின் ஏதேனும் ஐந்து திட்டங்களை விளக்கவும்.

PART B — (4 × 15 = 60 marks)

Answer any FOUR questions.

Each answer should not exceed 5 pages.

6. Explain the significance of environmental studies.

சுற்றுச்சூழல் ஆய்வுகளின் முக்கியத்துவத்தை விளக்கவும்.

7. Write a detailed note on "Need and importance of Environmental Education".

சுற்றுச்சூழல் கல்வியின் தேவை மற்றும் முக்கியத்துவத்தை விளக்கவும்.

8. What are the threats to biodiversity? Explain.

பல்லுயிரியலுக்கான அச்சுறுத்தல்கள் என்ன விளக்கவும்.

9. Analyze the role of an individual in prevention of pollution.

மாசு குறைபாட்டை தடுக்கும் ஒரு நபர் பங்கை ஆராயவும்.

10. Explain the significance of Environmental ethics.

சுற்றுச்சூழல் நெறிமுறைகள் – முக்கியத்துவத்தை விளக்கவும்.

11. Explain the significance of solid waste management.

திட கழிவு மேலாண்மை – முக்கியத்துவத்தை விளக்கவும்.

12. Explain how environment influences human health.

சுற்றுச்சூழல் மனித ஆரோக்கியத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பதை விளக்கவும்.

———————

| UG–133 | BLT–21 |
|---|---|

# B.A. DEGREE EXAMINATION – DECEMBER, 2018.

## Second Year

### மொழித்திறன்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒரு தொடரில் விடை தருக.

1. நகைச்சுவைப் பேச்சுக்கலையில் குறிப்பிடத்தக்க ஒருவரை எழுதுக.

2. பேச்சாளர்கள் தொலைக்காட்சியில் தோன்றும் போது எப்படி இருக்க வேண்டும்?

3. "தலையங்கம்" எவ்வாறு ஆங்கிலத்தில் குறிக்கப் பெறுகிறது?

4. "திருமுகம்" – பொருள் தருக.

5. "வரைவு" – என்றால் என்ன?

6. யுவாங் சுவாங் குறிப்பிடும் ஆவணம் எது?

7. “நற்சுவை” என்றால் என்ன?

8. “இலக்கியம்” – பொருள் தருக.

9. “நச்சிலக்கியங்கள்” – விளக்குக.

10. ரீரிக்காடிங் என்றால் என்ன?

11. “பல்துறைத் திறனாய்வு” – பொருள் தருக.

12. “அறிவிக்கை” – பொருள் தருக.

13. “நெகிழ்வுரை” – விளக்கம் தருக.

14. “கடையனுக்கும் கதிமோட்சம்” நூலை எழுதியவர் யார்?

15. கடிதம் என்ற சொல்லின் பொருள் என்ன?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடை தருக.

16. பேச்சுக் கலை குறித்த ஔவையாரின் வாக்கு என்ன?

17. மேடைப் பேச்சாளர்களுக்கு முதன் முதலில் பேசும் போது ஏற்படும் இடர்பாடுகள் எவை எவை?

18. தன் வரலாற்றுக் கட்டுரையாளர்கள் இருவரைக் குறிப்பிடுக.

19. செய்தித் தலைப்பு எவ்வாறு அமைய வேண்டும்?

20. கேலிச் சித்திரம் என்றால் என்ன?

21. சிலப்பதிகாரத்தில் உள்ள கடிதங்கள் யார் யாருக்கு எழுதியவை?

22. "உச்சக்கட்டம்" – விளக்குக.

பகுதி இ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடை தருக.

23. "பட்டிமன்றம்" – குறிப்பு வரைக.

24. செய்திக் கட்டுரைகள் என்பது குறித்து எழுதுக.

25. குடியரசின் நான்கு தூண்கள் எவை? விளக்குக.

26. கடிதங்களின் அமைப்பு முறையை ஞா. தேவநேயப் பாவாணர் வழி நின்று எழுதுக.

27. நூல் மதிப்புரையின் இலக்கணம் யாது?

28. சுருக்க முகப்பு என்றால் என்ன?

29. சுவை தரும் சொல் முறைகள் குறித்து எழுதுக.

பகுதி ஈ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. ஆவணத்தின் சிறப்பினை விவரி.

31. தலைப்பிடும் உத்திகள் குறித்து எழுதுக.

32. இலக்கியத் திறனாய்வின் வகைகளை விளக்குக.

33. “பெயர்ப்பலகைகள்” “சுவர் வாசகங்கள்” “கடை முகப்பு வாசகங்கள்” குறித்துக் கட்டுரை வரைக.

34. “செய்தித் தலைப்புக்கள்” பற்றி விவரி.

| UG–134 | BLT–22 |
|---|---|

# B.A./B.Lit. DEGREE EXAMINATION – DECEMBER 2018

## Second Year

வானொலி தொலைக்காட்சி கலை

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒரு தொடரில் விடை தருக.

1. காட்சித் தொடர்பியலில் (Visual Communication) எந்த வடிவத்தில் தகவல் பரிமாற்றம் நடைபெறுகிறது?

2. தகவல்களைக் குறியீடுகளாக மாற்றும் செயலை எவ்வாறு கூறுவார்கள்?

3. ஒளிப்படத்தை முதலில் வெற்றிக்கரமாக எடுத்தவர் யார்?

4. டாகரியா டைப் படங்கள் முதன்முதலில் எந்த நாட்டில் புகழ்பெற்றது?

5. வெப் பிலாக் (web blog) எனப்படும் வலைப்பதிவினை முதலில் வழங்கியவர் யார்?

6. ஜெபெக் (JPEG) விரிவாக்கம் தருக.

7. மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் எத்தனை வகைப்படும்?

8. இந்திய தந்திச் சட்டம் எப்போது வடிவமைக்கப்பட்டது?

9. தகவல் நெடுஞ்சாலை என குறிப்பிடப்படுவது எது?

10. வீடியோ என்னும் ஆங்கிலச் சொல் எதிலிருந்து வந்தது?

11. இந்தியாவிற்குள் வண்ணத் தொலைக்காட்சி எப்போது பயன்பாட்டிற்கு வந்தது?

12. புலூம்பெர்க் (**Bloomberg News**) செய்தி நிறுவனம் எந்த நாட்டைச் சேர்ந்தது?

13. தகவல் சமூக தினம் எந்த நாளில் கடைப்பிடிக்கப்படுகின்றது?

14. நடைமுறைக்கு வந்த முதல் ஒளிப்படத்திற்கு என்ன பெயர் சூட்டப்பட்டது?

15. ஒற்றைக் கலாச்சார முறைமைக்கு முக்கியக் காரணியாக விளங்குவது எது?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.

16. சைஃபர் சட்டத்தின் முக்கிய சாராம்சம் என்ன?

17. வெகுசனக் கருத்து பரிமாற்றம் என்றால் என்ன?

18. ‘தகவல் பாய்வு’ விளக்கம் தருக.

19. ஒளிப்படம் என்றால் என்ன?

20. வலைக்குழுக்கள் மூலம் ஏற்படும் நன்மைகள் என்ன?

21. தகவல் தொடர்பியல் விளக்குக.

22. தூது அனுப்புதலின் முக்கியத்துவம் என்ன?

பகுதி இ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒளிப்பரப்பும் நுட்பங்கள் பற்றி விளக்கி எழுதுக.

24. ‘விளம்பரத்தின் மூலம் விழிப்புணர்வுப் பணி எவ்வாறு செய்ய இயலும்’ – விவரி.

25. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் முக்கிய அம்சங்களை விளக்குக.

26. அச்சு ஊடகத்தின் வளர்ச்சி குறித்து விளக்குக.

27. ஒளிப்படப் பரிமாற்ற நுட்பங்கள் பற்றித் தெளிவுபடுத்துக.

28. இதழியல் நெறிமுறைகளை விளக்கி எழுதுக.

29. வெகுசன ஊடகத்தின் கடமைகளைப் பற்றி விவரி.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. ஒளிப்படக்கருவியின் வகைகளை விளக்கி எழுதுக.

31. பத்திரிகை மற்றும் புத்தகப் பதிவுச் சட்டத்தைப் பற்றி விளக்கி வரைக.

32. நேரடித் தகவல் தொடர்பு பற்றி விளக்கி வரைக.

33. மரபு வழி ஊடகங்களின் வளர்ச்சி மற்றும் வீழ்ச்சி பற்றி விவாதிக்க.

34. சொல் அல்லாத தொடர்பு முறையை எடுத்துக்காட்டுடன் விளக்கி எழுதுக.